போது 'நீங்கள் ஏற்கனவே சொன்ன உறுதிமொழிப்படி ஒரு மிலியன் யூனிட் தரப்படவில்லை; ஒரு மிலியன் யூனிட் தருகிறோம் என்று சொன்ன உறுதிமொழியை நீங்கள் காப்பாற்றத் தவறுவது சரிதானு, என்று அவர்கள் கேட்டபோது ஒரு மாநிலத்தி லுள்ள அரசு இன்னொரு மாநில அரசுடன் உடன்பாட்டுக்கு வருகிறபோது அந்த உடன்பாட்டை நிறைவேற்றுவது மாநிலங்களி டையே நல்ல உறவை வளர்க்கக்கூடிய வகையில் இருக்கும்— அதாவது கமிட்மென்ட். அந்த வகையில்தான் 0·4 மிலியன் தந்த நிலை மாறி ஒரு நாளைக்கு ஒரு மிலியன்யூனிட் என்ற அளவில், முதலில் எப்படி ஒத்துக் கொண்டார்களோ அதே அளவில் தரப் பட்டதே தவிர வேறல்ல.

கடந்த மாதத்தில்கூட மத்திய அரசிடம் இருந்து மேலும் ஒரு தாக்கீது வந்தது. அங்குள்ள தொழிற்சாலைகளுக்குப் போதிய அளவு மின்சாரம் கிடைக்கவில்லை, கர்நாடகத்தில மின்வெட்டு அதிகமாக இருக்கிறது, உங்களால் முடிந்தால் கூடுதலாகக் கொடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிருர்கள். ஆனல் நம் முடைய நிலைமையைப் பொறுத்தவரை பரிசீலித்த பிறகு தர இயலாத சூழ்நிலையில் இருக்கிறோம் என்று மத்திய சர்க்காருக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அண்டை மாநிலங்களிடையே நல்ல உறவும் மத்திய சர்க்காரிடத்திலே ஒரு சுமுகமான நிலைமை யையும் ஏற்படுத்துவதற்கு இது போன்ற காரியங்கள் நமக்குத் தேவைப்படுகின்றன.

(முற்பகல் 9-30)

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து மின்சாரம் பெறுவதற்கு வாய்ப்பு மிக எளிதாக இருப்பதாகவும் அப்படி மின்சாரம் பெற்ருல் அது இராம நாதபுரம், மதுரை மாவட்டங்களுக்குப் பயன்படுவதாகவும் இருக்கும் என்ற கருத்து நிலவுகிறதே, அது அரசுக்குத் தெரியுமா? அந்தத் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் தரப்படும்.

பூம்புகார் கலைக்கூடம்.

* 571 வின திரு. என் கிட்டப்பா; மாண்புமிகு செய்தி–சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா; பூம்புகார் கலைக்கூடத்தைக் காணவருவோரிடமிருந்து நாள்தோறும் வசூலாகும் தொகை சராசரியாக எவ்வளவு?

[திரு. ச. இராமச்சந்திரன்] [1978 மார்ச் 15

மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன் : கலைக்கூடத்தைக் காண வருவோரிடமிருந்து, நுழைவுக் கட்டணமாக நபர் ஒன்றுக்கு 25 பைசா வீதம் வசூலிக்கப்படுகிறது. நாள்தோறும் வசூலாகும் தொகை சராசரியாக ரூ. 275/-.

திரு.என்.கிட்டப்பா : தலைவர் அவர்களே, பூம்புகார் கலைக் கூடத்தைக் காணவருகின்றவர்களுடைய தொகை ஆண்டுதோறும் குறைந்து கொண்டே வருவதாக இப்போது சொல்லப்படுகிறது. அதற்கு முக்கிய காரணமாக நம்முடைய அரசால் அதற்கான பராமரிப்பு அதிகமாகக் கவனிக்கப்படவில்லை என்றுகூடக் கூறப்படுகிறது எனவே நமது புதிய அரசு நல்லமுறையிலே அதைப் பராமரித்து அந்தப் பூம்புகார் கலைக்கூடத்தைச் சீரிய முறையிலே நடத்துவதற்கு ஆவன செய்யுமா? அதோடு ஆண்டு ஒன்றுக்கு அதற்காகும் பராமரிப்புச் செலவு எவ்வளவு என்பதையும் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, பூம்புகார் கலைக்கூடம் பொதுத் துறையிலிருந்து சமீபத்திலேதான் சுற்றுலாத் துறைக்கு மாற்றப்பட்டிருக்கிறது. அதை நன்றாகப் பராமரிக்கவும், விளம்பரப்படுத்துவதற்கும் அதைக் காண வருவோர்களுடைய தொகை அதிகப்படுத்தவும் அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது.

1975-76 இல் வருமானம் ரூ. 72,009·60 பராமரிப்பு மற்றும் சம்பளச் செலவு ரூ 1,31,150.

1976-77 ஆம் ஆண்டில் வருமானம் ரூ. 60,806·25 செலவு ரூ 1,71,220.

1977-78 ஆம் ஆண்டில் ஏப்ரல் மாதம் முதல் செப்டம்பர் மாதம் முடிய வருமானம் ரூ 60,302·95, செலவு ரூ 59,995.

திரு மி. வின்சென்ட் : தலைவர் அவர்களே, இந்த பூம்புகார் கலைக்கூடம் கட்ட அறிஞர் அண்ணா காலத்திலே திட்டமிடப் பட்டது என்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் சொல்லப் படுவது உண்மையா? அது உண்மையாக இருந்தால் அண்ணா அவர்களுடைய பெயர் பொறித்த கல் அங்கே நிறுவப்படுமா?

மாண்புமிகு திரு ஆர்.எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, உலகத் தமிழ் மாநாடு நடந்தபொழுது தீவுத்திடலிலே அமைக்கப் பட்டிருந்த பூம்புகார் கலைக் காட்சியிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் மீண்டும் பூம்புகார் உருவாக்கப்படும் என்று பேசியதாக அறிகிறேன். அதையொட்டி உலகத் தமிழ் மாநாடு முடிந்ததற்கு பிறகு அன்றைக்கு அதிலே கிடைத்த நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபாயை பூம்புகாரை உருவாக்குவதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் இங்கே இருக்கின்ற குறிப்புகளிலிருந்தும் சான்றுகளிலிருந்

1978 மார்ச் 15] [திரு. ஆர். எம். வீரப்பன்]

தும் பேரறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கியதாகவோ அல்லது ஆரம்பித்ததாகவோ தகவல் இல்லை. 28–5–1968 ஆம் நாள் அன்றைய பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்த இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் பூம்புகாருக்கு அடிக்கல் நாட்டியதாக ஒரு செய்தி இருக்கிறது. தொடர்ந்து வேலைகள் நடைபெறவில்லை. 1970 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வேலைகள் துவக்கப்பட்டிருக்கின்றன. 1973 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கலைக்கூடம் முடிவுபெற்று திறக்கப்பட்டிருக்கிறது.

திரு கே. பண்ணை சேதுராம்: தலைவர் அவர்களே, இந்த பூம்புகார் கலைக் கூடத்தில் வசூலிக்கும் கட்டணத் தொகையிலிருந்து அந்தக் கட்டடத்திற்கு ஆன செலவை ஈடுசெய்துவிட்டதற்கு பிறகு நுழைவுக் கட்டணம் இல்லாமல் இலவசமாகவே அனுமதிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, அதற்காகப்போட்ட முதலீட்டை எப்போது எடுப்பது என்பது வேறு பிரச்னை. பெரும்பாலும் நடைமுறைச் செலவுக்கே நான் கொடுத்த கணக்கிலிருந்து துண்டு விழுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொண்டிருப்பார்கள் என்று கருதுகிறேன்.

திரு. கோ. இளங்கோவன்: பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கலைக்கூடத்தில் ஐம்பெருங்காப்பியங்களுள் தலையாயது என்று கருதப்படும் சிலப்பதிகாரம் முழுவதும் விளக்கமாகச்சிற்பங்களில் செதுக்கப்பட்டிருக்கின்றன. ஐவகை மன்றங்கள் அமைந்திருக்கின்றன. அவைகளைப்பற்றிப் பயணிகளுக்குத் தெளிவாக எடுத்துச் சொல்வதற்கு ஏற்றவகையில் சிலப்பதிகாரத்தில் தேர்ச்சி பெற்ற ஒருவரை அங்கே நியமிக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, பூம்புகார் பகுதியைப் பற்றியும் அந்தக் கலைக்கூடத்தைப்பற்றியும் ஒரு ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது. அந்த ஆய்வு முடிந்த பிறகு அதை இன்னும் மேம்பாட்டோடு, சிறப்பாக நடத்துவதற்கு மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய ஆலோசனையும் சேர்த்துக் கவனிக்கப்படும்.

572 *வினா திரு. என் கிட்டப்பா — மாண்புமிகு செய்தி—சுற்றுலாத்துறை அமைச்சர்கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆண்டுதோறும் சித்திரை முழு நிலவு நாளில் பூம்புகாரில் கொண்டாடப்பட்டு வந்த விழா நிறுத்தப்பட்டு விட்டதா?

(ஆ) ஆம் எனில், காரணம் என்ன?